BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் தொழில் வளர்ச்சி முகமை ஒரு ஆலோசனைக் குழுவை அறிவிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 9, 2021) – ப்ராம்ப்ட்டன் நகரின் கலை, கலாச்சாரம் & படைப்பாற்றல் தொழில் வளர்ச்சி முகமையானது (Arts, Culture & Creative Industry Development Agency) (ACCIDA) ஆலோசனைக் குழு உறுப்பினர்களை நியமிப்பதை அறிவிப்பதில் பரவசமடைகிறது; இவர்கள் முகமையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு வழிகாட்டுவார்கள் மற்றும் அதன் தொலைநோக்குப் பார்வைக்கான செயல்பாட்டை முன்னெடுத்துச் செல்வதில், இணைப்பதில் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர கலை மற்றும் கலாச்சாரப் பிரிவுக்காக வாதம் செய்வதில் துணையாக இருப்பார்கள்.

நிறுவனத்தின் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இருக்கும் இந்த ஆரம்ப குழுவானது, உள்ளூர் கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் மாற்றம் ஏற்படுத்துவோர் ஆகியோர் ப்ராம்ப்டனின் கலைஞர்களுக்கான உண்மையான சாம்பியன்களாக இருக்கின்றனர். இந்த ஆறு உறுப்பினர்களும் ஆரம்பக்குழுவின் தலைவராக இருக்கப்போகின்ற நுவி சித்து, பிராந்திய கவுன்சிலர் ரொவீனா சான்ட்டோஸ் மற்றும் திட்டப்பணி மூத்த முன்னணியாளர் மைக்கேல் விக்கர்ஸ் ஆகியோருடன் இணைவார்கள்; வலுவான ACCIDA வின் உருவாக்கம் மற்றும் கட்டமைப்பினை தொடர்ந்து செய்வார்கள்; இது ப்ராம்ப்ட்டனின் கலைச் சமூகம், அதன் வளர்ச்சி, அதற்கான ஆதரவு மற்றும் எதிர்காலத்தில் செழிப்படைதல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும்.

குழு உறுப்பினர்களுக்கான வரவேற்பு அழைப்பு இந்த கோடைப்பருவத்தின் துவக்கத்தில் கொடுக்கப்பட்டது. கவுன்சில் பிரதிநிதியும் பிராந்திய கவுன்சிலருமாகிய ரொவீனா சான்ட்டோஸ், நகர ஊழியர்கள் மற்றும் குழுவின் தலைமை ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவால் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டன.

ACCIDA என்பது ப்ராம்ப்ட்டன் நகரத்தின் கீழாக, மலர்ச்சி பெறவிருக்கும் ஒரு தனித்துவமான அமைப்பாகும், இது ஏற்கனவே 2021 ஆம் ஆண்டு தொடங்கி ஆண்டு முழுவதும் வழங்க பல்வேறு திட்டங்கள், சேவைகள் மற்றும் ஆதாரவளங்கள் மூலமாக இணைத்தல் வளர்த்தல், கொண்டாடுதல் மற்றும் அவற்றுக்காக வாதிடுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இதில் பயிற்சிப் பட்டறைகள், கலைஞர்களுக்கான வட்டமேஜை மாநாடு, கண்காட்சி வாய்ப்புகள் மற்றும் வளர்வதற்கான வழிகாட்டுதல் திட்டங்கள் ஆகியவை அடங்கும். நகரம் ஊடாக படைப்புஉருவாக்கம் செய்வதற்கான இடத்திற்கான தேவைக்கு முகமன் கொடுப்பது உள்பட, திட்ட நிகழ்ச்சி நிரலாக்கம் மற்றும் ஆதரவுக்கான

சேவைகளை வழிகாட்ட, கலை சமூகத்தினரிடமிருந்து இருந்து தொடர்ந்து பின்னூட்டக் கருத்துக்களை தெரிவிக்கவும் உதவும்.

இந்த முகமையானது, ப்ராம்ப்டனின் கலாச்சார மாஸ்டர் திட்டத்தை வழங்குவதற்காக நகர நிர்வாகத்துடன் இணைந்து செயல்படும்; இதுவே ஒரு துடிப்பான கலைகளுக்கான காட்சி வடிவம் மற்றும் ஆக்கபூர்வமான பொருளாதாரத்தை உருவாக்குவதில் ஒரு முக்கியமான இணைப்பும் ஆகும். கலை சமூகத்தினரிடமிருந்து ஆலோசனை குழுவிற்கு கிடைக்கும் பின்னூட்டக் கருத்துக்கள் திட்ட நிகழ்ச்சி நிரலாக்கம் மற்றும் ஆதரவுக்கான சேவைகளுக்கு வழிகாட்டும்; நகரம் எங்கிலுமாக படைப்புக்கான இடத்திற்கான தேவைக்கு முகமன் கொடுப்பதுவும் இதில் அடங்கும்.

## ACCIDA ஆரம்ப ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

**ஹர்மன் க்ரேவால்**

ஹர்மன் என்பவர் கலை, கலாச்சாரம் மற்றும் புதுமை படைப்பு ஆகியவற்றுக்கான சமூகங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான, ஒரு அலைபாயாத உறுதிப்பாட்டுடன், ஒரு ஆக்கப்பூர்வமான மாற்றம் காணத்துடிப்பவர் ஆவார். இவர் Lab B எனப்படும் அடுத்த தலைமுறை படைப்பாற்றல் கொண்ட தொழில்முனைவோருக்கான, கூடி பணி புரியக்கூடிய இடம் மற்றும் சமுதாயத்தை முதன்முதலாக நிறுவியவர் ஆவார்; இவர் தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் சவால்களையும், நம்மைச் சுற்றிலுமாக கலைஞர்களைக் கொண்ட சமூகம் கொண்டிருப்பதன் மதிப்பினையும் புரிந்துகொண்டவர். தனது தொழில்நுட்ப திறமைகளை வலுப்படுத்தும் வகையில் கவனம் செலுத்துதல், தொழில் பாதைக்கான வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் தேடிக்கண்டறிவதற்கான பயணத்தை அதிகரிப்பது ஆகியவற்றின் மூலமாக தொடர்ச்சியாக தனது சொந்த கலைப் பழக்கங்களை அபிவிருத்தி செய்ய ஹர்மன் பாடுபடுகிறார்.

**மைக்கேல் ஹால்ஸ்**

கலைகள் மீது பற்று கொண்ட மைக்கேல் அவர்கள் பீல் கோரல் சொசைட்டி (Peel Choral Society) யிலும் மற்றும் ப்ராம்ப்ட்டன் சிம்ஃபனி இசைக்குழு (Brampton Symphony Orchestra) விலும் சேவையாற்றினார்; அதே போல் அவர் இருந்த ப்ராம்ப்ட்டன் ஆர்ட்ஸ் கவுன்சில் வாரியத்தின் இயக்குனர்கள் சபையில் (Brampton Arts Council Board of Directors) 14 ஆண்டுகளாக தலைவராக பணியாற்றினார். வாழ்நால் முழுக்கவுமாக பொது சேவை செய்தமையினால், 2012 ஆம் ஆண்டில் இரண்டாம் ராணி எலிசபெத் அவர்களிடமிருந்து டயமண்ட் ஜூபிலி பதக்கம் பெற்றார். அவர் பேரார்வம் கொண்ட விஷயமாக இருந்தது இசையாகும் மற்றும் அவர் 48 ஆண்டுகளாக ஒரு குழுவின் பாடகராகவும் இருந்தார்.

**சுமித் ஜட்ஜ் (Sumit Judge)**

எழுத்தாளர், இயக்குனர், நடிகர் மற்றும் வக்கீல்,என சுமித் அவர்கள் பல-தரப்பு கலைஞராக உள்ளார். அவர் தற்போது பீப்பிள் ஆஃப் தி கம்யூனிட்டி (POC) YouTube சேனலுக்காக எழுதி, தயாரித்து பங்கேற்கவும் செய்கிறார்; கனடாவில் உள்ள தெற்காசிய சர்வதேச மாணவர்களின் மனநலன், தலைமுறைகளுக்கு இடையேயான துயரம், மனித உரிமை துர்பிரயோகம் ஆகியவற்றைச் சார்ந்து, தகவல் அளிக்கும் ரீதியில், நகைச்சுவை கலந்து எடுத்துரைக்கிறார். முதல் குறும் படமாகிய விஷால் திரைப்படமானது தெற்காசியாவிலிருந்து வரும் சர்வதேச மாணவர்கள் படும் துயரங்களைப் பற்றியது; மற்றும் இது, ஏர் கனடா விமானங்கள், ஜீ டிவி யுஎஸ்ஏ மற்றும் ஒன்டாரியோவின் கலைக்கூடம் ஆகியவற்றில் திரையிடப்பட்டது.

**விஜய் குமார்**

பொதுமக்களுக்கான கொள்கை பற்றிய ஆராய்ச்சியாளரான இவர் இண்டிஜெனோமிக்ஸ் கல்வி நிறுவனம் (Indigenomics Institute) ஆசிய பசிபிக் ஃபவுண்டேஷன் ஆஃப் கனடா (Asia Pacific Foundation of Canada) மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்[Organisation for Economic Co-operation and Development (OECD)] ஆகியவற்றில் ஆராய்ச்சிக்கான பதவிகளை வகித்தவர். உள்ளூர் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாயத்தின் செல்வ வளம் கூட்டுதல் ஆகியவற்றின் மீது பேரார்வம் கொண்டவர். ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப்பார்வை மற்றும் கலாச்சாரத்திற்கான மாஸ்டர் திட்டத்தின் உருவாக்கத்தின் போது விஜய் வாதம் செய்தார்; இதற்கான கண்காட்சிகளுக்கு ப்ராம்ப்ட்டன் நகரில் இவர் உபசரணை செய்கிறார்.

**ஜேல் ரிச்ச்ர்ட்ஸன் (Jael Richardson)**

சிபிசிக்கு என்றே புத்தகக் கட்டுரை எழுத்தாளராகிய இவர், ஸ்டோன் த்ரோயர் (*The Stone Thrower)* எனும் புத்தகம் எழுதியவராவார், மற்றும் ப்ராம்ப்ட்டனில் இலக்கிய பன்முகத்தன்மை திருவிழாவை (FOLD) நிறுவியவர் மற்றும் செயல்பாட்டு இயக்குனரும் ஆவார். அவரது அறிமுக நாவலாகிய, கட்டர் சைல்ட் (*Gutter Child) புத்தகம்,* ஜனவரி 2021 இல் ஹார்ப்பர் கொலின்ஸ் கனடா (HarperCollins Canada) கீழாக உடனுக்குடன் விற்றுத்தீர்ந்த புத்தகமாகும்; மற்றும் அமேசான் முதல் நாவல் விருதுக்கான பட்டியலில் இவரது பெயர் சேர்க்கப்பட்து. ரிச்சர்ட்சன் படைப்பாற்றல் ரீதியாக எழுதும் வகையில் கெல்ஃப் (Guelph) பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு MFA பட்டம் இவருக்கு கிடைத்துள்ளது.

**ஜஸ்ப்ரீத் சாந்து**

கார்ப்பொரேஷன் ஆஃப் மேஸ்ஸே ஹால் மற்றும் ராய் தாம்ஸன் ஹால் (Corporation of Massey Hall and Roy Thomson Hall) நிறுவன உருவாக்கத்தின் தற்போதைய துணைத் தலைவராக இருக்கும் ஜஸ்ப்ரீத் அவர்கள் லாப-நோக்கல்லாத, உயர்-தாக்கம் கொண்ட சமூகங்களைக் கட்டமைப்பதில்

பேரார்வம் கொண்டவர்;வணிகம், சந்தைப்படுத்தல் மற்றும் தலைமைப் பண்புக்கான புத்திக்கூர்மை ஆகியவற்றை சமன்படுத்தக்கூடிய தனித்துவமான தன்மையைப் பிரயோகிக்கின்ற மாற்றத்தை உண்டாக்குகின்ற முகவர் ஆவார். அடிப்படை-தீவிர செயல்முறை மற்றும் நிறுவன கலாச்சார மாற்றங்கள் தேவைப்படுகின்ற சிக்கலான திட்டங்களை சமாளிக்கின்ற அணிகளுக்கு வெற்றிகரமாக தலைமை வகித்தவர். கலாச்சார ஆய்வுகள் மற்றும் சிக்கலான கோட்பாடு வகையில் BFA முதுநிலைப் பட்டம் பெற்ற இந்தப் பெண் திரைப்பத் தயாரிப்பு மற்றும் தெற்காசியா பற்றிய ஆய்வுகளில் BA பட்டம் பெற்றவரும் ஆவார்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்டனின் வளர்ந்து வரும் கலை துறையில் செய்யப்படும் வேலைகளை மேற்கொண்டு செய்வதற்காக, ACCIDA குழு உறுப்பினர்களைப் பற்றி அறிவித்திருப்பது உற்சாகமளிக்கிறது. இந்த முகமை அறிமுகம் செய்த ஏராளமான திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் மூலமாக எங்கள் அணியை இந்த ஆண்டு கலை சமூகத்துடன் இணைக்கும் ஒரு விதிவிலக்கான வேலை ஒன்றை செய்துள்ளது. இந்த புதிய உறுப்பினர்கள் தங்கள் அபரிமிதமான உள்ளூர் அறிவு மற்றும் தொழில்முறை நிபுணத்துவம் ஆகியவற்றைக் கொண்டுவருவார்கள் என்று நான் நம்புகிறேன்; இது உண்மையிலேயே நமது கலைஞர்கள் செழிக்க உதவும். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

" ACCIDA குழுவை அறிவித்தமையானது, நமது கலைச் சமூகத்திற்கு தேவையான முக்கிய ஆதரவு மற்றும் ஆதாரவளங்களை வழங்குவதற்கான மற்றொரு பெரிய படியாகும். நிறுவனத்தின் அறிவு மற்றும் நெட்வொர்க்கை வலுப்படுத்த உறுதி செய்யக்கூடிய பல்வேறு பின்னணி மற்றும் அனுபவங்களை உள்ளடக்கிய ஒரு குழுவைப் பார்ப்பது மகத்தான ஒரு விஷயமாகும். "

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத்தலைமை பொறுப்பு, பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்; கவுன்சில் குழு உறுப்பினர், கலை, கலாச்சாரம் & படைப்பாற்றல் தொழில் வளர்ச்சி முகமை*

"ப்ராம்ப்டனின் கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் ரீதியான தொழிலானது, நமது நகரத்தின் துடிப்பு மிக்க பலகலவை கொண்ட சமூகங்கள் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும் மற்றும் இந்தக் குழு அறிவிக்கப்பட்டதைப் பார்ப்பது ஒரு அற்புதமான மைல்கல் அடைந்து போல் ஆகும். அதன் துவக்கத்திலிருந்து, ACCIDA கலை சமூகங்களை இணைப்பதிலும் மற்றும் ஆதரிப்பதிலும் பல படிகளைக் கடந்துள்ளது. இந்த புதிய உறுப்பினர்கள் ப்ராம்ப்ட்டனில் ஒரு வலுவான, நன்கு இணைக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான கலைத் துறையை உந்தித்தள்ள உதவுவதற்காக தங்கள் விரிவான பின்புலத்தைக் கொண்டு வருவார்கள். "

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

BRAMPTON

**Media Release**

"சென்ற கோடை பருவத்தில் ஒரு அற்புதமான நேர்காணல் செயல்முறை செய்தபிறகு, கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பு துறைக்கான வளர்ச்சி நிறுவனத்தின் ஆலோசனை குழுவில் சேரவிருக்கும் திறமையான கலை நிபுணர்கள் கொண்ட ஒரு குழுவினை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். ACCIDA வை அமைப்பதில் புதிய ஆலோசனை குழுவிடன் சேர்ந்து பணியாற்ற உற்சாகமாக இருக்கிறேன், மற்றும் ப்ராம்ப்ட்டன் முழுவதும் உள்ள கலைஞர்களின் குரல் எங்கும் கேட்க வைப்பதில் உதவவும் ஆசைப்படுகிறேன். "

- *நுவி சித்து, தலைமைப் பொறுப்பு, கலை, கலாச்சாரம் & படைப்பாற்றல் தொழில் வளர்ச்சி முகமை (ACCIDA)*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca